# இனப் பிரச்னை: கூட்டணியின் பிரதிநிதிக் குழு ஜனாதிபதியை சந்திக்கும்


விலை ரூபா 1-25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆனி 26 ஜுலகம் 2 இதழ் 149

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 10-7-1986


சென்னை, ஜூன். 9 தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியற்குழு (பொலிட் பீரோ) ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த பிரதிநிதிகள் குழுவொன்றை கொழும்புக்கு அனுப்பிவைப்பதென்று முடிவு செய்துள்ளது.

சென்னையில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் அரசியற் குழு இன்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே மேற்படி முடிவு தெரிவிக்கப் பட்டுள்ளது.

இனப்பிரச்னை தீர்வுக்கென இலங்கை அரசு முன்வைத்துள்ள யோசனைகளை ஏனைய தமிழ்அமைப்புக்களின் ஆலோசனைகளுக்கும் அனுப்பிவைப்பதென்று தமிழர் விடுதலைக்கூட்டணி முடிவுசெய்துள்ளது.

அத்துடன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. சம்பந்தன் ஆகியோர் புதுடில்லியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி சிவசங்கருடன் நடத்திய பேச்சுக்கள் பற்றிய அறிக்கையையும் கூட்டணியின் அரசியற் குழு [பொலிட் பீரோ] பரிசீலனை செய்தது.

இதேவேளை ஜனாதிபதி ஜெயவர்த்தன கூட்டியுள்ள அனைத்துக்கட்சி மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி பங்கு கொள்ளுமா என்பது குறித்து கூட்டணி தெளிவு படுத்தவில்லை. [பி]

## திருமலையில் நடந்த கோரச்சம்பவம்

# பொறியியலாளர், குடும்பத்தினர் ஊர்காவல்படையால் கொலை

## சடலங்கள் அதே இடத்தில் எரிக்கப்பட்டன

(அலுவலக நிருபர்)

**திருமலை நகரசபையின் ஓய்வு பெற்ற பொறியியலாளரும், அவரது மனைவியும், இரு புதல்விகளும், மகனும் ஊர்காவல் படையினரால் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டு அவ்விடத்திலேயே தீ மூட்டி எரிக்கப்பட்டனர். இச் சம்பவத்தில் படுகாயமடைந்த மேலும் இருவர் திருமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

நேற்று புதன்கிழமை அதிகாலை இக் கோரச் சம்பவம் இடம்பெற்றது.

ஓய்வு பெற்ற பொறியியலாளரான தம்பியப்பா (60 வயது), திருமதி தம்பியப்பா (45 வயது), இவர்களது பிள்ளைகளான செல்வி ரஞ்சனி (18 வயது), செல்வி சாந்தினி (16 வயது). செல்வன் ஜோதிராஜ் (14 வயது) ஆகியோரே படுகொலை செய்யப்பட்டவர்களாவர்.

தம்பியப்பாவின் மூத்தபுதல்வன் தனுராஜ் 21 வயது என்பவர் அண்மையில் திருமலை நகரப்பகுதியில் இடம்பெற்ற ஆயுதப்படையினரின் தேடுதல் நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்டு 'பூஸா, முகாமில் மற்றும் கைதானவர்களுடன் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

திருமலை பிரதானவீதியிலுள்ள உபதபால் அலுவலகத்துக்கு முன்னால் தம்பியப்பாவின் வீடுஉள்ளது. நேற்று அதிகாலை 4-30மணியளவில் துப்பாக்கிகள், வாள் சகிதம் கடமையிலீடுபட்டிருந்த ஊர்கா

(5ம் பக்கம் பார்க்க)

## 'அமிர்', 'சிவா' இடம்பெறுவர்

புதுடில்லி, ஜூலை-9 தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதிநிதிகள் குழு எதிர்வரும் 12ம் திகதி கொழும்பு செல்லவுள்ளதாகவும், இக்குழுவில் தலைவர் திரு மு. சிவசிதம்பரம், செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம், திரு சம்பந்தன் உட்பட ஏழுபேர் இடம்பெறுவார்கள் என்றும் அறியப்படுகிறது. [பி]

## 15 சிங்களவர் பலி 50 இளைஞர் கைது

திருமலை, வியாழன் திருமலையில் நேற்று முன்தினம் இரவு 15 சிங்களவர்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து அம்மாவட்டத்தில் நேற்றுக்காலை 6 மணி தொடக்கம் ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூட்டுக் கொலைச் சம்பவம் தொடர்பாக நேற்றுக்காலை 10 மணியளவில் திருமலை நகரைச் சுற்றி வளைத்து திடீர் தேடுதல் வேட்டை நடாத்திய ஆயுதப்படையினர் சுமார் 50 தமிழ் இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்.

திருமலையிலிருந்து நேற்று முன்தினம் இரவு 10-30 மணியளவில் 3 லொறிகளில் மீன் ஏற்றிக்கொண்டு கொழும்பு நோக்கிப் புறப்பட்டன. இந்த 3 லொறிகளிலும் 16 சிங்களவர்கள் பயணம் செய்தார்கள்.

திருமலை நகரிலிருந்து 19 கி.

(5ம் பக்கம் பார்க்க)

## தென்னிலங்கை செல்ல

## தனியார் வாகனங்களுக்கு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், வியாழன் யாழ் குடாநாட்டிலிருந்து தென்னிலங்கை நோக்கிச் செல்வதற்காக யாழ். கோட்டை முகாமில் அனுமதிப்பத்திரம் பெறச்சென்ற தனியார் வாகன உரிமையாளர்களுக்கு அனுமதி பத்திரம் வழங்க மறுக்கப்பட்டுள்ளதாம்.

தனியார் பஸ்களாயிருந்தால் பிரயாணிகளுடனும், லொறி

(5ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னை

## 'பேச்சுவார்த்தைமூலம் தீர்க்க போராளிகளை கோருவேன்'

சென்னை, ஜூலை 9 இலங்கை இனப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகளை தொடங்குவதற்கு இலங்கையின் அரசியல் சூழ்நிலை இப்போது சாதகமாக இருப்பதாக சிறிலங்கா மக்கள் கட்சி பொதுச் செயலாளர் திரு. விஜய குமாரணதுங்க சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இலங்கையில் வாழும் சிங்களவர்களும் தமிழர்களும் அமைதியை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்த அவர் பேச்சுவார்த்தை மூலம் உடன்பாடு ஒன்று

(5ம் பக்கம் பார்க்க)

## 'அனுமதிப் பத்திரம்' தேவையில்லை

வவனியா, வியாழன் "வவனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருட்களை லொறிகளில் ஏற்றி வருவதற்கு அனுமதிப் பத்திரம் தேவையில்லை" என வவனியா இணைப்பதிகாரி கேர்ணல் கொப்பேகடுவ வவனியா வர்த்தகர்களுக்குத்தெரிவித்துள்ளார். [வா]

## விபத்தில் பலியான

## போராளிகளுக்கு இன்று அஞ்சலிக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், வியா. முகாம் தாக்குதல் ஒன்றிற்காகச் செல்லும்வழியில் படகு விபத்தில் பலியான மக்கள் விடுதலைப் படை வீரர்கள் ஏழுபேருக்கும் அஞ்சலி செலுத்தும் இன்று 10-ந் திகதி அஞ்சலிக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

மக்கள் விடுதலைப் படை வீரர்களின் மறைவுக்குஅஞ்சலி

(5ம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின்

## சுயநிர்ணய உரிமையை அரசு அங்கீகரிக்கவேண்டும்!

## ந.ச.ச கட்சி ஜனாதிபதியிடம் கோரிக்கை.

கொழும்பு புதன் இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை அரசு அங்கீகரிப்பதுடன் தமிழ், சிங்கள மொழிகள் உத்தியோகபூர்வ மொழிகளாக்கப்பட வேண்டுமென நவ நவசமாஜக் கட்சி ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

நம சமாஜக் கட்சியின் உறுப்பினர்கள்குழுவொன்று கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதியைச் சந்தித்தபோதே இவ் வேண்டுகோள் விடப்பட்டது.

இச்சந்திப்பின் போது ந.ச.ச கட்சி சார்பில் செயலாளர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன. திரு வி.எஸ். மணியம், நீல் விஜேதிலக்க, எட்வின் கொத்தலாவல, நளின் பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கட்சித் தலைவர் திரு வாசுதேவ நாணயக்கார இந்தியா சென்றமையினால் இச் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை.

இலங்கை ராணுவத்தில்

(5ம் பக்கம் பாாக்க)

## பூண்டுலோயா பகுதியில்—

# ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிங்கள—தமிழ் அகதிகள் தஞ்சம்

ஹற்றன், புதன். பூண்டுலோயாப் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட கலவரம் காரணமாக பூண்டுலோயா சிங்களப் பாடசாலையிலும், பௌத்த விகாரையிலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட சிங்கள அகதிகளும் அம்மன் ஆலயமொன்றில் தமிழ் அகதிகளும் தஞ்சமடைந்துள்ளனர்.

அகதிகளாக இருக்கும் தமிழ் அகதிகள் பலவித துன்புறுத்தல்களுக்கும் இலக்காகிவருவதாகவும், இரவு நேரங்களில் தமிழ் அகதிகள்மீது கல்வீச்சுக்கள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் பாதுகாப்பு நடவடிக்கையிலீடுபட்டிருக்கும் அதிரடிப்படையினர், வெளித்

(5ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கணேசலிங்கம் சுருட்டு சுத்தமான புகையிலையினுல் தயாரிக்கப்பட்டது. தேவையான வியாபாரிகள் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்: S T. கணேசலிங்கம், No 5, வளாக வீதி, திருநெல்வேலி. [C 3386]

இறக்குமதி செய்த மீன் சாப்பாடு[Fish Max] மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு M. G. M, 777, K K S Road, and 208, 1st Cross St. Jaffna. Telephone 22611. (A 920)

தென்னந்தும்பு அடிக்கும் மெசின் ஆறுபகுதியும், கயிறு திரிக்கும் பகுதிகளும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு 119 பிறவுண் ரோட், யாழ்ப்பாணம். (C 3384)

ஆனைக்கோட்டை உபதபாற்கந்தோருக்கு அருகாமையில் சிறு வீட்டுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: க சண்முகம், ''திருமகளகம்'', கூளாவடி லேன், ஆனைக்கோட்டை. [C 3375]

## தேவை

யாழ். நகரில் உள்ள ஒரு கல்வி நிலயத்திற்கு ஓரளவு ஆங்கில அறிவுள்ள ஒரு பெண் உதவியாளர் தேவை முழுவிபரங்களுடன் எதிர்பார்க்கும் சம்பளத்துடனும், விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3392, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 3392)

கண்டாவளை பணல் 100 கியூப், திருநெல்வேலி பல்கலைக்கழக மாணவர் நிலையக் (Student Center] கட்டிட வேலைத்தளத்திற்கு உடன் தேவை. பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்: Lanka Builders [Student Center] மாணவர் நிலையம், யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம். (C 3396)

பிடவை வியாபாரம் செய்ய பெண்பிள்ளைகள் தேவை. நேரில் வரவும், த.சங்கரப்பிள்ளை அன் சன்ஸ். 21, நவீன சந்தை. யாழ்ப்பாணம். (C 3346)

மருதடி எழும்பிள்ளையார் தேவஸ்தானத்தினுல் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் கற்பூரத் தொழிற்சாலையில் கற்பூரம் அடிப்பதற்கு பெண்கள் தேவை. ஆண் விற்பனையாளர்களும் தேவை, முன் அனுபவம் உடையவர்களுக்கு முன் உரிமை அளிக்கப்படும், வேலைசெய்ய விரும்புபவர்கள் ஞாயிற்றுக்கிழமை 13ம் திகதி காலை 10-00 மணிக்கு சுண்டிக்குளி றக்கா ரோட்டில் இருக்கும் மருதடி ஆலயத்தில் நேரில் சமுகமளிக்கவும். [C 3355]

## சேவை

மிருதங்கம், வயலின், கிற்ருர் உட்பட சகல விதமான வாத்திய கருவிகளும் விற்கவோ வாங்கவோ அல்லது பழுது பார்க்கவோ உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்: கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1, நாவலர்ரோட், யாழ்ப்பாணம். [C 3379]

## தவறிவிட்டது

இல. 302961344 க. தருமலிங்கம் இருபாலை ரோட், கோண்டாவில் என்பவருடைய அடையாள அட்டை யாழ் ஆஸ்பத்திரி வாட்டில் இருக்கும் பொழுது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், தயவுசெய்து மேல் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம்வழங்கப்படும். [C 3394]

சுந்தரம் சிவஞான சுந்தரம் என்பவருடைய அடையாள அட்டை இல. 652952 56 V தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து குலம்வீடியோ ஹோம, சாவகச்சேரி என்றவிலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C 3380]

## வகுப்புகள்

ஆரம்பம் - City and Guilds London - Part I And II, Electrical Engineering [Power] 1½ மாதகால வயறிங் பயிற்சி 6 மாதகால மோட்டார் றீவயிண்டிங் பயிற்சி. முன்கூட்டியே உங்களைப் பதிவு செய்யுங்கள் ஓமேகா, மானிப்பாய். வீதி, யாழ்ப்பாணம். [ஈழநாட்டிற்கு எதிரில்.] (C 33×9)

Electronic Engineering English Medium - B Sc 1st year Level வயறிங், ரேடியோ. ரீவி (Antenna and Deck), வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், English Typing, புதிய வகுப்புக்கள்செய்முறைப் பயிற்சிகளுடன் 12-07-86 இல் ஆரம்பம கின்றன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall, ஆனைப்பந்தி சந்திக்கு அருகில்), 328. நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 3359)

### வலி கிழக்கு தெ.ப.ப.நோ.கூ. சங்கம்

### அறிவித்தல்

வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 5000 வரையிலான வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்கிருக்கின்றன மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250/-உம்,

கேள்விப்பத்திரம் ஒன்று ரூபா 1/-ம் செலுத்தி சங்க வேலைநாட்களில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 15-07-86ம் திகதி செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்.

நீர்வேலி.

[A917]

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## தேவை

புதிய, காலைநேர நாளாந்த ஒரு மணித்தியால வகுப்பு Spoken English ஆரம்பமாகின்றது. ஆசிரியர் S. B. Iyar, இடம் 12, வையன் வீதி, நல்லூர். நேரம காலை 7மணி-8 மணி வரை. ஆரம்பமாகும் நாள் வருகிற 10ம் திகதி வியாழன். (C-3333)

தபால்மூலம் லண்டன் பரீட்சைக்களுக்கான Book-keeping and Accounts யாவர்க்கும் உகந்த வகையில் Spoken English அடங்கிய ஆங்கிலப் பாடமும் போதிக்கப்படும். நேரிலும் இப்பாடங்களுடன் தமிழ், ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்து வகுப்புகள்வாரவார இறுதி நாட்களில் நடைபெறுகின்றன. இம்பீரியல் இன்ஸ்ரிரியூட்ஸ், மெயின் வீதி. இளவாலை. (C3160)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### இராமநாதன் நுண்கலைப் பிரிவிற்கான அனுமதிபற்றிய விதிகள்

1987/88 கல்வியாண்டிலிருந்து இராமநாதன் நுண்கலைப் பிரிவிற்கான புதிய மாணவர்களின் அனுமதி விதிகள் மாற்றப்பட்டுள்ளன. புதிய அனுமதி பற்றிய விதிகள் பின்வருமாறு:

(1) க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே முறையில் கர்நாடக சங்கீதம் அல்லது பரதநாட்டியம் உட்பட குறைந்தது மூன்று பாடங்களிற் சித்தியடைந்திருக்கவேண்டும்.

க.பொ த. உயர்தரப் பரீட்சையில் கர்நாடக சங்கீதத்தில் அல்லது பரதநாட்டியத்தில் சித்தியடையாதவர்கள் வட இலங்கை சங்கீத சபையினர் நடாத்தும் பரீட்சையின் நான்காம் தரத்திற் (Grade IV) சித்தியடைந்திருக்க வேண்டும்.

(2) அனுமதி கோரும் ஒவ்வொரு தகுதி வாய்ந்த பரீட்சார்த்தியும் செய்முறைப் பரீட்சைக்கும் வாய்மொழிப் பரீட்சைக்கும் தோற்ற வேண்டும். இப் பரீட்சைகளில் மூன்று முறைக்கு மேற்படாது தோற்ற அநுமதியளிக்கப்படும்.

(3) அநுமதி கோரும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அநுமதிக்கட்டணமாக ரூபா 15/-இனைச் செலுத்துதல் வேண்டும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

[A918]

### ADMISSION REQUIREMENT FOR ENTRANTS TO THE RAMANATHAN ACADEMY OF FINE ARTS (RAFA)

### University of JAFFNA

The Admission Requirement for new entrants to the Ramanathan Academy of Fine Arts has been changed. The new admission requirement, effective from the academic year 1987/88, will be as follows:

(a) atleast three passes in the G. C. E. (A/L) obtained at one and the same sitting with Carnatic Music or Bharata Natyam as one of the subjects; and candidates not having passes in either of these subjects should have a pass in the Grade IV of the NCOMS examination.

(b) all eligible candidates seeking admission will have a practical test and an oral examination and will be permitted not more than three attempts.

(c) Every candidate seeking admission will be required to pay an application fee of Rs. 15/.

REGISTRAR.

University of
Jaffna. (A 919)

### பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மரணசாதனம் ஏதும் எழுதாது காலஞ்சென்ற தும்பளையைச் சேர்ந்த சபாரத்தினம் சிவஞெளிபவாவின் சொத்து விடயமாக.
காலஞ்சென்றவர்.

1. சபாரத்தினம் சிவஞெளிபவா கைம்பெண் சுசீலா
மனுதார்.

வழ. இல. T/1227

எகர்

1. சிவஞெளிபவா விசாகர் (பராயமற்றவர்)
2. சிவஞெளிபவா சேதுராஜ் (பராயமற்றவர்)
3. இராமசாமி சபாரத்தினம் (வழக்குப்பாதுகாவலர்)

எதிர்வாதிகள்.

மேற்குறித்த இலக்கவழக்கு மேற்குறித்த இறந்தவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்குறித்த நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்குறித்த எதிர்வாதிகள் அல்லது அக்கறையுள்ள ஆள் அல்லது ஆட்கள் எவரும் 1986ம் ஆண்டு ஆடி மாதம் 25ஆம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றில் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் ஏதும் இருப்பின் அவற்றைக் காட்டுமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

1986ம் ஆண்டு ஆனி மாதம் 30ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி.

சண்முகம் நடராசா,
பதிவாளர்.

வரைவு:
வ. கு. கணபதிப்பிள்ளை,
மனுதாரின் சட்டத்தரணி.
புலோலி மேற்கு,
புலோலி. (C 3322)

### அபிவிருத்திக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன் கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தபொதுக் கூட்டம் இம்மாதம் 13ம்திகதி ஞாயிற்றுக் கிழமை காலை பத்துமணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி த. இராமசாமி அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. புதுவருட நிர்வாகிகள் தெரிவு முக்கிய நிகழ்ச்சியாக இடம்பெறவுள்ளது.

### பனை அபிவிருத்திச் சபை

### கூறுவிலை கோரல்

சபையின் உற்பத்தித்தேவைகளுக்கென வழங்குனர்களிடமிருந்து பின்வரும் பொருட்களுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

1. Steam Jactetted Vaccum Cooking pan with Motor and Boiler.
2. "DHIMAN" Automatic Plast-0-Plast, Rotary Machine with Batch Roller sizing attachments. Rorming M. chine with cooling convayar with Blower.
4. Con seperator (6000 R. P. M.)

15-07-86ம் திகதிக்கு முன்னர் இவற்றிற்கான கூறுவிலைகளை அனுப்பி வைக்கவேண்டும். மேலும் விபரஙகளுக்குத் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம், யாழ்ப்பாணம்.
(A 921)

### முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



புஸ்பராஜா சஞ்சீவன்

கைதடி மேற்கு புஸ்பராஜா மாலா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சஞ்சீவன் இன்று தனது முதலாவது பிறந்தநாளை கைதடியில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்ருர். இவர் நல்லூர்க் கந்தன் அருள்பெற்று பல்லாண்டு வாழ அம்மா, அப்பா, பாபுமாமா, மற்றும் உறவினர்கள், கொலண்ட்டில் வதியும் மாமா ஞானராசா, அமெரிக்காவில் வதியும் சித்தப்பா ரவி ஆகியோர் வாழ்த்துகிருர்கள். (C 3388)

ஜோர்டானிலிருந்து

# பி. எல். ஓ. பிரதிநிதி ஒருவர் நாடு கடத்தப்பட்டார்

அம்மான்

ஜோர்டான் நாட்டு அரசாங்கம் அம்மானிலுள்ள திரு. ஹலீல் அல் டஸிர் என்னும் சிரேஷ்ட பி. எல். ஓ. பிரதிநிதி ஒருவரை நாடு கடத்திவிட்டது.

பி. எல் ஓ. ஸ்தாபனத்திற்குள்ளேயே ஒரு மிகப் பெரும் குழுவைச் சேர்ந்த அல் அபாவைச் சேர்ந்த அம்மானிலுள்ள பி. எல். ஓ அலுவலகத்தை மூடி விடுவதென்றும் ஜோர்டான் அதிகாரிகள் மேற்கொண்ட முடிவையடுத்து இந்தவெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. [து]

இந்திய மீனவர் விவகாரம்:

# இராமேஸ்வர மீனவர் குழு இலங்கை புறப்பட்டது

சென்னை

கடந்த வாரம் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 9 இந்திய மீனவர்களின் சடலங்களை அடையாளம் காண்பதற்கென இராமேஸ்வரத்திலிருந்து மீனவர்குழுவொன்று நேற்று இலங்கை நோக்கிப் புறப்பட்டது.

பாரத கடலோரப் பாதுகாப்பு கப்பல் இந்த மீனவர் குழுவை சர்வதேச எல்லைக் கோட்டுக்குக் கொண்டு செல்ல அங்கிருந்து இலங்கைக் கடற்படை இவர்களை கச்சதீவிற்கு அழைத்துவருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (து)

3-வது டெஸ்ட்

## வெற்றி - தோல்வி இல்லை

லண்டன், ஜுலை 9

இங்கிலாந்துக்கும் - இந்தியாவுக்குமிடையில் நடைபெற்ற 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டியில் இந்தியா வெற்றிபெற 236 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் 2-வது இன்னிங்ஸை துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது.

இந்தியா ஒரு கட்டத்தில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 115 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இச்சந்தர்ப்பத்தில் மழை பெய்ததை அடுத்து ஆட்டம நிறுத்தப்பட்டது பின்பு ஆட்டம் தொடங்கியதும் இந்தியா ஓட்டங்கள் ஏதும் எடுக்காத நிலையில் மேலும் 3 விக்கெட்டுகளை இழந்தது. இதை அடுத்து துடுப்பெடுத்தாடிய அஸாருதீனும், மோறும் நிதானமாகஆடி ஓட்டங்களின் எண்ணிக்கையை 174 ஆக உயர்த்தியபோது, பலத்த மழை காரணமாக ஆட்டம் கை விடப்பட்டது.

ஸ்கோர் விபரம்: இங்கிலாந்து: 390, 235. இந்தியா:- 390, 174-5.

இப்போட்டித் தொடரில் இந்தியா முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. (வி)

## டுனீஸிய பிரதமர் பதவி நீக்கம்

லண்டன்

டுனீஷியா நாட்டு பிரதம மந்திரி திரு. மொகமட்வென் யாலியை அந்நாட்டு அதிபர் யூர்ஜீபா பதவிநீக்கம் செய்துள்ளார்.

நாட்டின் பிரதமமந்திரி பதவியிலிருந்தும் ஆளும் கட்சியின் தலைமைச் செயலர் என்ற பதவியிலிருந்தும் யாலி மாற்றப்படுகின்றார். [து]

## அலங்கார உற்சவம்

அராலி, புதன்

அராலி வடக்கு நாகேந்திர மட தேவஸ்தான ஆனி திருமஞ்சன அலங்கார உற்சவம் கடந்த 4ம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெற்றுவருகிறது.

12ம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் 13ம் திகதி ஆனி உத்தர நடேசர் அபிஷேகமும் நடைபெற்று 14ம் திகதிதிருவூஞ்சல் திருவிழாவுடன் நிறைவுபெறும்.

## சமாதான சபை உறுப்பினர்

கிளிநொச்சி, புதன்

சாவகச்சேரி வடக்கு நல்லிணக்க சமாதான சபையின் புதிய நிர்வாகிகள் தேர்தல் சங்கத்தானை அரசடி வாசிகசாலையில் இளைப்பாறிய பொலிஸ் அதிகாரி எஸ் பூபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவானார்கள். திருவாளர்கள் சு.விநாயகமூர்த்தி, சு. முருகேசு, வி. பொ. தியாகராசா, வை. சின்னத்தம்பி, த. சிதம்பரப்பிள்ளை.

மண்டைதீவு

## மகாவித்தியாலயம் மீண்டும் ஆரம்பம்

மண்டைதீவு, புதன்

ஒருமாத காலமாக ஆசிரியர்களின் வசதியீனங்களால் இயங்கமுடியாத நிலையிலிருந்த மண்டைதீவு மகா வித்தியாலயம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வித்தியாலய அதிபர் திரு எஸ். சண்முகநாதன் எடுத்த நடவடிக்கையின்பேரில் இவ் வித்தியாலயம் மீண்டும் இயங்குவதற்கான நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

ஆசிரியர்களுடனும் பெற்றோருடனும் இககிராமத்திலுள்ள ஏனைய பொது ஸ்தாபனங்களுடனும் அதிபர் தொடர்பு கொண்டு எடுத்த நடவடிக்கையின் பயனாக மாணவர்கள் தொகை படிப்படியாக அதிகரித்துவருகிறது.

இடம்பெயர்ந்து அயற் கிராமத்தில் வசித்துவரும் மாணவர்களும் நேற்றுமுதல் வருகைதரத் தொடங்கியுள்ளனர்.

## அனுதாபத் தீர்மானம்

பண்டத்தரிப்பு, புதன்

சங்கானை ஐக்கிய நலன்புரிச் சங்கம் கலவானைத் தொகுதி முன்னாள் எம். பி. திரு. சரத் முத்தெட்டுவேகமவின் திடீர் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானமொன்றை நிறைவேற்றி அன்னாரின் குடும்பத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

சங்கத் தலைவர் திரு. கட்சன் செல்வராஜா தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானப் நிறைவேற்றப்பட்டது.

## அகதிகளுக்கு உதவ ஏற்பாடு

நெல்லியடி, புதன்

நெல்லியடி பட்டினசபை பிரதேசப் பாதுகாப்புச்சபை எந்தநேரமும் அயல் கிராமங்களிலிருந்து அகதிகளாக வருவோருக்கு உணவு வகைகள் பால்மா, மற்றும் உடைகள் ஆகியன வழங்கும் நோக்கத்துடன் அரிசி பணம் உடை வகைகள் ஆகியவற்றைப் பெற்று கரவெட்டி பங்குத்தந்தை அருட்திரு சகாயநாயக அடிகளாரின் பாதுகாப்பில் வைத்துள்ளது.

## பன்னவேலை பயிற்சிநிலையம்

புலோலி, புதன்

பருத்தித்துறை வியாபாரி மூலை ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையம் இலங்கை பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் 'பன்ன வேலைப் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இப் பன்னவேலைப் பயிற்சி நிலையத்தை இலங்கைப் பனம் பொருள் அபிவிருதிச் சபையைச் சேர்ந்த திரு. எஸ். யோகநாதன் திறந்து வைத்தார். சுமார் 20 யுவதிகள் இப் பன்னவேலைப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## வெளியூர் ஆசிரியர் தங்கவசதி

நெல்லியடி புதன்

வேலணைக் கல்வி வட்டாரத்திலுள்ள சகலபாடசாலைகளும் வழமைபோல இயங்க வேண்டுமென்னும் நோக்கத்துடன் வெளியூர்களிலிருந்து அங்கு செல்லும் சுமார் நூறு ஆசிரியர்கள் தங்குவதற்கும் உணவு வசதிக்குமாக வேலணைமத்திய மகாவித்தியாலயத்தில் அவர்களுக்குச் சகலஒழுங்குகளும்செய்யப்பட்டுள்ளதாக வேலணைகல்வியதிகாரி பண்டிதர் பொன். கணேசன் தெரிவித்தார்.

திங்கள் காலையும், வெள்ளி மாலையும் யாழ்நகரிலிருந்து அவர்களுக்கென அராலித்துறை பஸ் போக்குவரத்தும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தொலைத்தொடர்பு இலாகா:

# தனியாரிடம் ஒப்படைக்கும் அரசின் யோசனைக்கு எதிர்ப்பு

வவனியா புதன்

''தொலைத்தொடர்பு இலாகாவினை தனியாரிடம் ஒப்படைக்கும் அரசின் யோசனையை வவனியா அஞ்சல் தொலைத் தொடர்புக் கிளை தொழிற்சங்கம் எதிர்க்கிறது'' என்று மேற்படி சங்கத் தலைவர் திரு. என். சிவநாதன் வருடாந்தக் கூட்டத்தில் தலைமையுரை ஆற்றுகையில் கூறினார்.

வவனியா அஞ்சலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சிவநாதன்மேலும் கூறியதாவது;

''எமது புதிய தபால்மா அதிபர் எமது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பாரென கருதுகின்றேன். முகாமைத்துவ சீர்திருத்த குழு எமது சங்க உறுப்பினர்களுடைய பிரச்னைகளை சம்பந்தப்பட்ட மேலிடத்துடன் தொடர்பினை ஏற்படுத்தியுள்ளது''

வவனியா பிரதம தபால் அதிபர் திரு. எஸ், அரியநாயகம், வவனியா மாவட்ட தொலைத் தொடர்பு அதிகாரி திரு. ஜே. சௌந்தரராஜன் ஆகியோரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தீவுப்பகுதி

# அத்தியாவசிய தேவைகளின் இடையூறுகுறித்துக்கருத்தரங்கு

வேலணை புதன்

தீவுப்பகுதியின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு இடையூறுகவுள்ள போக்குவரத்துச் சேவைப் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பாக எதிர்வரும் 12ம் திகதி யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கருத்தரங்கொன்று இடம் பெறவுள்ளது.

இக்கருத்தரங்குயாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்துறை தலைவர் கலாநிதி எஸ். பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

யாழ், பல்கலைக்கழக புவியியற்துறை விரிவுரையாளர் திரு இரா. சிவச்சந்திரன், யாழ் மாவட்ட கமநலச் சேவைகள் திணைக்கள சிரேஷ்ட உதவி ஆணையாளர்திரு. கே. பரமலிங்கம, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. கா. குகபாலன், புங்குடுதீவு வெகுஜன விழிப்புக்குழு ஒன்றியத் தலைவர் திரு. சு வில்வரத்தினம் ஆகியோரின் கூட்டு முயற்சியால் இக் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

தீவுப்பகுதியின் உணவு விநியோகம், வைத்திய சேவை, தபால் தந்திச் சேவை போக்குவரத்து வசதிமுதலான அத்தியாவசிய தேவைகள் இக் கருத்தரங்கின் ஆய்வில் பிரதானமாக இடம்பெறவுள்ளன.

## ஒரு மீனவர் காயம்

யாழ்ப்பாணம் வியாழன்

மீன் பிடிப்பதற்குச் சென்ற குருநகர் மீனவர் மூவருள் ஒருவர் இராணுவத்தினரால்சுடப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இச் சம்பவம் சிறுத்தீவுக் கடலில் நடைபெற்றது மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து இராணுவம் சுட்டதில் நவரத்தினம் மரியதாஸ் (34 வயது) என்பவரே காயமடைந்தவராவார் இவருடன் கூடச் சென்ற இருவரும் தப்பிவிட்டதாகத் தெரிகிறது. (ஐ)


## 'ஹெலி' தாக்குதல் வீடு சேதம்

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை மாலை 'சீ பிளேன்' வட்டமிட ஹெலிக்கப்டரிலிருந்து துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் கிழக்குத் தெருவில் உள்ள வீடொன்றின் கூரைப் பகுதி சேதமடைந்துள்ளது. மறுநாள் காலையும் கடற் பகுதியில் பீரங்கி வேட்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன.


இன்ரநாஷனல் கொமினிகேஷன் கொம்பிளெக்ஸ்

International Communication Complex.




282 A, யாழ்ப்பாண வீதி, மானிப்பாய்.

✯ உள்நாட்டு-வெளிநாட்டு தொலைபேசி (Telephone)

✯ தொலைத்தொடர்பு (Telex)

✯ பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே நிம்மதியாக, நேரடியாக உலகின் எப் பகுதிக்கும் தொடர்புகொள்ள—

✯ இரவு-பகல் 24 மணி நேரமும், வாரம் பூராவும் தொடர்ச்சியான சேவையைப் பெற

தன்னியக்க மின்பொறிக் கருவிகள் பொருத்தப்பட்ட ஒரே ஒரு நவீன

தகவல் தொடர்பு நிலையம்!

(A777)

### மணிவாக்கு

இழுபறியே உலகம். எல்லாவற்றையும் துறந்து சாமியாக இருந்தாலும் கும்பிட ஆள்வரும். அப்படி வரும்போது ஏதாவது கூறவேண்டும். உடனே கொழுவல் தொடங்கிவிடும்.

- சிவயோக சுவாமிகள்

# நமதுநோக்கு

## சமரச சச்சரவு

துரியோதனனும் தர்மனும் ஒரே ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். துரோணாச்சாரியார் என்ற ஒரே குருவிடம் பயிற்சி பெற்றவர்கள். ஆனால் குருவின் ஆணைப்படி நல்லவன் யாராவது உண்டாவென்று உலகில் தேடிப்பார்த்த துரியோதனனுக்கு நல்லவன் யாரும் தென்படவில்லை. தர்மனுக்கோ கெட்டவன் யாரும் அதே உலகில் அதே காலத்தில் அகப்படவில்லை.

நலம் கேடு எங்கே இருக்கிறது? சண்டை சமாதானம் எங்கே இருக்கிறது? உலகில் அல்ல; மக்கள் மனதில்.

யாரோ ஒரு குழந்தைப் பெண்ணின் வதந்தி பரவிய போது, கொழும்பு பாடசாலைகள் அனைத்தும் மூன்று மாதங்கள் பூட்டப்பட வேண்டுமென்று கேட்டிருந்தார் எதிர்க்கட்சித் தலைவர் அனுரா; ''இன்று தமிழ்ப் போராளிகள் அனைவரும் ஆயுதங்களைக் கீழே போட்டதன் பின்னரே சமரச முடிவுகள் தீர்க்கமாக ஆராயப்படவேண்டும்'' என்கிறார் அவர் ஒரு தனிமனிதன் அல்ல, பல்லாயிரம் மக்களின் பிரதிநிதி. அவரைப் போல சிந்திக்கும் மக்களுக்கு மனதில் சமாதான நாட்டம் உண்டா?

இன்று நடைபெறும் போர் சற்றும் ஓயாத பட்சத்திலும் சமரசப் பேச்சுக்கள் தீவிரம் பெற்றிருக்கின்றன. ஆனால் இதனைக் கேலிக் கூத்தென்று இன்று எவரும் சொல்லத் துணியார். நாட்டில் அமைதி வேண்டுமென்ற எண்ணம் நாளுக்குநாள் தலையெடுத்திருப்பதைக் காணமுடிகிறது. வழி தெரியாது தடுமாறுவதும் அதேபோன்றது.

இந்த எண்ணம் எவ்வளவு முற்றிவந்தபோதும் இதனைக் கெடுக்கும் நாசகாரிகள் என்றும் இருந்தே தீரும். வஞ்சனை மட்டுமல்ல, தெளிவான சிந்தனையற்ற நிலையும் இந்தக் குழப்பநிலைக்குத் தூபமிடுகின்றது.

'தமிழ் மக்கள் பாதுகாப்பு' என்ற விடயத்தை, யாழ்ப்பாணத்தை மையமாகக்கொண்டுபார்க்கின்றஒரு அதிசயம் குறிப்பிடத்தக்கது. நாட்டை ஆளும் தலைவர்கள் அதனை நேரில் பார்க்கும் பாக்கியமற்றவர்கள். ஒற்றையாட்சியிலே பிடிவாதம்கொண்ட பேர்வழிகள் வடக்கே போவது 'வடக்கிருத்தல்' என்று நினைக்கின்றனர்.

குண்டுகள் ஹெலிகள் மத்தியிலும் பாடசாலைகள் நடைபெறுகின்றன. அவற்றை மூன்றுமாதம் பூட்டிவைக்க வேண்டுமென்ற குரலெழுப்பும் பொதுவிவேகமற்ற பிரஜை எவரும் இங்கில்லை.

பரிசளிப்பு விழாக்கள் பொருட்காட்சிகள் மிகச் சாதாரண காலம் போல் நடைபெறுகின்றன. குண்டையும் ஹெலியையும் விலத்திக்கொள்ள நீண்டகால அனுபவம் ஓரளவிற்கு உதவுகின்றது. அதே சமயம் எதிர்பாராத கோர அழிவுகள் நடந்து கொண்டேயிருக்கின்றன.

குறிப்பாக மண்டைதீவில் நடைபெற்ற மீனவர் கொலை பயம் தெளிந்த நிலையிலும் இப்பகுதி மக்களை உலுப்பிவிட்டது. என்றுமில்லாத இந்தப்பயங்கர சூழ்நிலையில் முன்னேற்பாடான சென். பற்றிக்ஸ் கல்லூரி பரிசளிப்பு நடைபெற்றபோது அதன் பிரதமவிருந்தினரான தமிழ்ப் பேரபிமானி கத்தோலிகக திருச்சபையின் யாழ். பேராயர் அதி வண. தியோகுப் பிள்ளை நிகழ்த்திய பேச்சு கொழும்பு கத்தோலிக்க திருச்சபைத் தலைவரின் காரசாரமான கண்டனத்துக்குள்ளானது. என்ன அறியாமை!

இது எதனைக் காட்டுகிறது? இச் சிறு நாட்டில் மிக முக்கியமான யாழ்ப்பாணத்தின் கொடுமைகள் என்ன, எவ்வாறு நடைபெறுகின்றன என்பதை கொழும்பு அரசு மட்டுமல்ல தலைநகரில் வீற்றிருக்கும் அரச செல்வாக்குப் படைத்த கத்தோலிக்க திருச்சபையே உணர முடியவில்லை என்பதே! முதலாவது அரசு, இரண்டாவது தெய்வமா?.

காலஞ்சென்ற பிஷப் லக்ஷ்மன் இலங்கையில் நடைபெற்ற 1983 கலவரத்தைக் கேள்விப்பட்டு, இங்கிலாந்திலிருந்து வந்து யாழ்ப்பாணம் விரைந்தது மட்டுமல்லாமல் இன்றைய (அவருடைய பந்துக்கள் தலைமை தாங்கும்) ஐ. தே. அட்சியில்தமிழர்கள் நசுக்கப் படுகின்றனர் என்ற பெருங் கவலையில்அரைவயதில் மறைந்தார்.

நாம் குறிப்பிட்ட பரிசளிப்புவிழாவில் குழுமியிருந்த பெரும்பாலமை யோர் மண்டைதீவுக் கொடுமையால் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்பட்ட பெற்றோர், உறவினர், மாணவர் உட்பட இந்தக் கவலையில் தோய்ந்திருந்த அனைவருமே!

யாழ் ஆயர் அவர்கள் சபையினருக்குப் பேசவேண்டிய விடயம் இந்தக் கொடுமைக்குப்புறம்பாக விருக்க முடியுமா? என்ன மடமை!

''தற்போதுள்ள கஷ்டமான சூழ்நிலையில் எமது பிள்ளைகளுக்குச் சிறந்த சல்வியைப்புகட்டுவது அவசியமெனினும் பாதுகாப்பற்ற எமது மக்களைக் காப்பாற்றுவதற்கு நிலையிலுள்ள வழிமுறைகளை ஆய்வது அதைவிட அவசியமாகும்'' என்றார் பேராயர் தியோகுப் பிள்ளை! பொறுப்புடைய மக்கள் தலைவர் என்பதால் அதுவும் மதத்தலைவர் என்பதால் இவ்வாறு மிகமிதமாக அளந்துபேசமுடிந்தது!

அண்மையில் நிக்கரகுவ இடதுசாரி அரசை கண்டித்த பாப்பரசர் 'தும்பு பறக்கப் பேசியிருக்கிறு' ரென்று பத்திரிகைகள் மிகப்பிரபலமாகக் குறிப்பிட்டிருக்கின்றன. தெய்வமே ஆத்திரமடையக் கூடிய விடயங்களில் தெய்வீக மனிதர் அவ்வாறு நடப்பது அதிசயமா?

யாழ் பேராயர் இன்றைய 'போர்' கொடுமைகளை நேரடியாகக்கண்டு அனுபவம் பெற்ற போதும், சாதாரணமாக நடந்து கொண்டது, சமாதானத்தில் அவர் வைத்திருக்கும் நம்பிக்கையை நிரூபிக்கின்றது. இன்றேல் ஐ நாவின் உதவியை நாடியிருப்பாரா?

அந்த நம்பிக்கை எவ்வித வஞ்சனைத் திட்டங்களுக்கும் பலியாகாதென்பது திண்ணம்.

கொழும்பு கத்தோலிக்க திருச்சபைக்கு இந்திய மத்தியஸ்தமோ, வேறெந்த சர்வதேச ஸ்தாபன உதவியோ, நல்லெண்ணமோ தேவைப்படவில்லை இந்த நாட்டின் இன்றைய ஆட்சியே இதனை நிறைவேற்றுமென்கிறது. பிலிப்பைன்ஸ் கருதினல்சின் ஆற்றிய சாதனை எத்தகையதென்பதை நாமறிவோம்.

பல்லாயிரக்கணக்கில் மக்களைப்பலிகொடுத்த தமிழ் மக்கள் சமரசம் என்ற பதத்தில் இலகுவாக எடுபடமாட்டார்கள் சமரசதிட்டத்தின் ஆழநீளத்தைப் படித்து சரிபிழை சொல்லும் வல்லமையும் அவர்களுக்கில்லை.


இது கிரேக்கர் கொண்டு வந்த மரக்குதிரை போன்றதா என்பது நன்ருக ஆராயப்பட வேண்டுமென்பதே அவர்களின் பிரதான விண்ணப்பம்.

# அரைக்கம்பத்தில் பறக்கும் மயிலிட்டியின் 'மீன்கொடி'

மயிலிட்டி நோக்கி நான் போன மினிபஸ் ஓடிக்கொண்டிருந்தது, இடையிடையே சினிமாப் பாட்டுகள். அதில் ஒரு பாட்டு 'ஒரு புறம் வேடன், மறுபுறம் நாகம், இரண்டுக்கும் நடுவே அழகிய கலைமான்'

கப்பல்களுக்கு வேலையில்லை!

பலாலி இராணுவ முகாமுக்கு அருகிலே இருக்கும் பெரிய மீன்பிடிக் கிராமம் மயிலிட்டி இங்கு நம்தேடிப் பிடித்த இரு மீனவர்களான க. பசுமாலை, சு. வையாபுரி ஆகியோர் மயிலிட்டி மக்க



### 'பொறி'யில் சிக்கிய மயிலிட்டியில்

### பறிகளும் படகுகளும் மட்டுமா காய்கின்றன?

### வயிறுகளுந்தான்...!

போகிற இடத்துக்குப் பொருத்தமான பாட்டுத்தான்- அப்பாடா!!

கிழக்கிலே பலாலி இராணுவ முகாம், மேற்கே ஹாபா வியூ முகாம்; நடுவிலே மயிலிட்டி!

கூவிலில் கள்ளு, பருத்தித்துறை வடை என்பவற்றின் பிரக்யாதியை பலர் அறிந்துள்ளது போல, குரக்கன் பிட்டையும், மயிலிட்டிச் சுருவறையையும் எந்தச் சீனத்து ஹொட்டல் உணவும் தாண்டிவிட முடியாது.

ளின் துன்பங்களை எமக்கு விளக்கினர்.

கே: கடல் வலயச் சட்டத்தால் உங்கள் தொழிலில் நூறுவீதம் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதா?

ப: ஆம், ஆனைப்பட்ட இராமேஸ்வர மீனவனே கப்பலைக் கரையிலே கட்டிவிட்டான். இந்தியப்பேரரசே எமது அரசாங்கத்தோடை

ப: திருவிளையாடல் படத்திலை தருமிக்குப் பொற்கிழி கிடைச்ச கதைதான் உதுவும் 5 பிள்ளைகள் கொண்ட குடும்பத்துக்கு மாதம் 250/- கொடுக்கிருர்கள். இந்த 250 ரூபா ஒருமணி நேரம் நாம் பிடித்த கட்டாக் கருவாட்டின் விலைதான் பயங்கரவாதத்தை அடக்குகின்றோம் என அரசு செலவிடும் பணத்தில் ஒரு வீதம் கூட எமக்கு நிவாரணமாகக் கிடைப்பதில்லை. கொழும்பில் அழகுக்காக மீன்

**● திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்**

கடல் தொழிலில் இலங்கைக்கு அதிக வருமானத்தை ஈட்டிக் கொடுத்த மயிலிட்டித் துறைமுகம் விதைவையின் கோலத்தில் வெறிச் சோடிப் போயிருக்கிறது. மீனவர்க்குத் தொழில் இல்லை, ஒண்டும் செய்ய முடியாமல் கிடக்குது நாங்களாவது கடலில் இறங்குவதாவது ...!

கே; கடலில் தொழில் செய்யாது விடுவதனுல் உங்களுக்கு வறுமை நிவாரணம் வழங்கப்படுகின்றதே:

வளர்க்கும் முதலாளிகள் கூட மாதம் 10 000 சம்பாதிக்கிருர்கள் இங்கு மாதம் இரு நூறு முன்னூறு கொடுத்து மீனவரின் கண்ணில் மண்ணைத் தூவுகிருர்கள்.

(5ம் பக்கம் பார்க்க)

# யாழ். பல்கலைக்கழக கலாசாரகுழுவின் புதிய தயாரிப்பு "மண்சுமந்தமேனியர்--2"

பொழுது போக்குக்காக அலைந்து திரியும் ஒரு கூட்டம், எங்காவது குசாலாக குந்தியிருந்து கூத்துப் பார்த்துவிட்டுப் போன காலங்கள், யாரும் விரும்பியோ விரும்பாமலோ மறக்கப்பட வேண்டியவையாகவும், மாற்றப்பட வேண்டியவையாகவும் உள்ள இக்கால கட்டத்தின் பின்னணியிலே இன்றைய சமூகத்தின் கலைத் தேவையை முன்னெட்டியே யா/பல்கலைக்கழக கலாசார குழுவின் ''மண்சுமந்த மேனியர்' பல சிரமங்களுக்கு மத்தியிலும் பல இடங்களிலும் மேடையேற்றப்பட்டது இந்த வகையில் இந்நாடகத்தை யாராவது பொழுது போக்குக்காகவென்றே பாரத்து, பார்த்தபின்பும் 1½ மணிநேரம் மகிழ்ச்சியாகக் கழிந்து விட்டது என்ற திருப்தியோடு சென்றிருந்தால் ... அது மிகவும் வேதனைக்குரியவிடயமே.

**-பொற்பன்-**

'மண்சுமந்த மேனியர்' நாடகத்தைத் தொடர்ந்து கலாசாரக்குழுவினர் அவ்வப்போது ''மாயமான்'' என்ற வீதி நாடகம் மூலமாகவும் ''நாமார்க்கும் குடியல்லோம்'' என்கின்ற வில்லுப் பாட்டு நிகழ்ச்சிமூலமும் இவற்றைவிட ''விடுதலைப் பாடல்கள்'' கதாப்பிரசங்கம் என்பவற்றின் மூலமும் தமது கலாசாரச் சுற்றுலாவை மேற்கொண்டனர். இவையும் அவ்வக்கால உடனடித்தேவைகளை மையமாக வைத்தே நிகழ்த்தப்பட்டு வந்தன என்பதை மனங்கொளல் வேண்டும்.

''மண்சுமந்த மேனியர்'' நாடகம் மேடையேற்றப்பட்டு நிறுத்தப்பட்ட பின் இன்று வரைக்கும் உள்ள இடைப்பட்ட காலத்தில் எமது சமூகத்திலேற்பட்ட பலவகையான மாற்றங்களும் மக்களின் தேவைகளும் எதிர்பார்ப்புக்களும் கருத்தில் கொள்ளப் பட்டே இன்று அந்நாடகத்தின் தொடற்சியாகவு வளர்ச்சியாகவும் ''மண்சுமந்தமேனியர்'' நாடகம் மேடையேற்றப்பட உள்ளது. அன்றைய இன்றைய சூழ்நிலைகளை நன்கு உணர்ந்தும் அவற்றினுல் குழப்பங்களுக்கு உள்ளாகியுள்ள எமது மக்கள் இக்கலை வடிவத்தை தங்கள் அன்றைய சூழலின் பாதிப்புக்குள்ளாகிய இதே நிலையோடும் சீர்தூக்கிப் பார்த்து இரசிக்க வேண்டிய பொறுப்புள்ளவர்களாக இருக்கிருர்கள் என்பதை கருத்தில் கொள்கின்றோம்.

அன்று 'மண்சுமந்தமேனியர்' பார்த்தவர்களுக்குஇன்று இது அதன் தொடர்ச்சியாகவும் வளர்ச்சியாகவும் அமையப்போகின்ற அதேவேளையில் இன்று இந்நாடகத்தை மட்டும் பார்ப்பவர்களுக்கு இது புதிய இன்றைய சமூகப் பிரச்னையை எடுத்துக்காட்டுவதாக மட்டும் அமையும் என்பதை மனங்கொளவைத்துதொடச்சி என்னும் அம்சம் இன்று இந்நாடகத்தை இரசிப்பதறகு ஒரு பிரச்னையாக அமையமாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### தேர்த்திருவிழா

(பூரி[

உலகப் பிரசித்திபெற்ற பூரிஜெகனுத் சுவாமியின் தேர்த்திருவிழா நேற்று தொடங்கியது. பிரதான நிகழ்ச்சி ஒரிசா மாநிலத்தில் பூரியில் நடைபெறும். புதுடில்லியில் ஜெகனுதர் ஆலயங்களிலும் இது கொண்டாடப்படுகிறது. (து)

# அரைக் கம்பத்தில்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கே: கடல் வலயச்சட்டத்தால் உங்கள் மனநிலையில் தாக்கம் ஏற்பட்டிருக்கிறதா?

ப: கடுமையாக! கடல் வலயம் ஒரு பக்கம், பாதுகாப்பு வலயம் மறுபக்கம் எனது வீடும்' மில்லும் இராணுவ முகாமில் இருந்து 600 மீறறர் தூரத்தில் தான் உள்ளது. ஆயினும் நாம் வீடு வாசல்களை இழந்து மாதகலில் கொட்டில் போட்டு வாழ்கின்றோம். பழைய வீட்டிலிருந்து ஏதாவது ஒன்று எடுக்கச் சென்ருல் ''எங்கிருந்தோ ஏவி 'விட்டான் கிளியை அது எம் தலையில் போட்டதடிபழியை'' 'ஷெல்' வந்து விழுகின்றது.

கே;- மயிலிட்டியில் மீன் பிடித்தொழிலால் பாதிக்கப்பட்ட இடங்கள் பற்றி விபரிக்க முடியுமா?

ப:- வேல்வீதியடி, பணிவுதுறை, திருப்பூர், காளவாய் ஆகிய இடங்கள் முற்ருகச் செயலிழந்து விட்டன இங்கு மொத்தம் 600 குடும்பங்கள்; 8000 மக்கள். 1000க்குத அதிகமான வள்ளங்கள் கரையினில் தூங்கி வழிகின்றன.

கே:- கடல் வலயச் சட்டத்தாலேற்பட்ட வேறு பாதிப்புகள்...?

ப: வலையைப் பாருங்கள்! எத்தனை விதமான வலைகள்! சூடைவலை, நெத்தலிவலை அறக்கொட்டியான்வலை, எனப் பெறுமதியான வலைகள்! இவற்றை ஒவ்வொரு நாளும் கடலிலே தோய்த்து வைக்க வேண்டும். இல்லையென்ருல் கறையான் ஏறிவிடும். கடல் கரைக்கே போக முடியாத நாம் வலைகளை கழுவ முடியுமோ? கிழக்கே தாழையடி இந்காலை காரைநகர் மட்டும் இடம் பெயரப் பார்கிறோம் அதனுல் நிம்மதி இழந்து போனேம்.

கே;- மீன் பிடித்துறையில் மயிலிட்டி மக்களின் சாதனைகள் என்ன? கடல் வலையச் சட்டத்தால் அது எப்படிப் பாதிக்கப்பட்டு உள்ளது.

ப: எமது கடலில் பல கண்டத்திட்டுக்கள் இருக்கின்றன. ''பீட்ரு பாங்'' என்ெருரு இடம் இருக்கிறது அந்த இடத்துக்குப் போய் மீன்பிடிக்கக் கூடிய அணுகுமுறைகள் எங்கள் மீனவர்கட்குத் தெரியும். எமது கடல்வலயச் சட்டத்தால் நாம் போக முடியாத இடமெல்லாம் பர்மா, யப்பான் காரன் மீன்பிடித்துப் போகு பிடித்துப் போகின்ருன் தம்பி... கயல்மீன் என்ெருரு இனம் இருக்கு கடலலை நுரை கிடையாவிடில் குட்டிகளை நோக்கிக் கருணையான பார்வை ஒன்றை வீசும குட்டிக்கு அந்தப்பார்வையால் பசி தீணி போகும் இந்த அற்புத சக்தி அறிந்தே பாண்டிய மன்னன் கயல் மீனைத்தன் கொடியாக்கினுன்? கயல் மீன்போல் நாமும் எமது பிள்ளைகளைப் பார்த்துக் கொண்டிருக்கப்பசி போகுமா விடிஞ்சு முகம் கழுவ முன்பே பசாவிளா னுக்கை ஆமி, பலாலிக்கு வெளியாலை ஆமி ஹாபர்வியூவுக்கு வெளியாலை ஆமி அங்கை ஆமி இஞ்சை ஆமி எனச் செல்லடி சொலலிச் சனங்கள் ஓடுதுகள்· இதனல் பிராணனே அரைவசி போய் விட்டது. மிகுதி உயிரை வைத்திருப்பது பெத்துப் போட்ட இந்தக் குழந்தைகளுக்காகத்தான்.

கே: கடல் வலயச் சட்டப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: தங்கள் புடவைகள் விற்பனையாவதற்கு இந்தியாவிலுள்ள பட்டுப்புடவை நெசவாளரின் விரல்களை ஆங்கில அரசாங்கம் முந்தி வெட்டித் தள்ளியது. இப்போது எமது நியாயமான உரிமைகளைப் பறிப்பதறகாகத் தமிழ் மீனவர்களை அரசாங்கம் கறுப்புப் படை மூலம் பரலோகம் அனுப்புகிறது. அதுதான் எமது எண்ணம்!

கே: ஆள் கடலுக்கு செல்லாது தூண்டில் மூலம் மீன் பிடிக்க முடியாதா?

ப; மலையைக் கல்லி எலியைப் பிடித்த கதைதான்! தூண்டில் வலையும் அதிகாலை 4 மணிக்குத்தான் அதிகம் பிடிக்க முடியும். அதிகாலையில் யமதூதர்கள் வந்து விட்டால் ஒடுபாதைகள் கூட எமக்குத் தெரியாது ஆக வேண்டியது தான்!


## கடைசிநேர வரிவிளம்பரம்

### தேவை

நன்கு அனுபவமுள்ள சமையல் வேலை தெரிந்தவர்களும், வெயிற்றர் வேலை செய்யக் கூடியவர்களும் உடன் தேவை நேரில்வரவும். நிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம் கவுஸ். 370 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [C 3406]

தெல்லிப்பழையில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு இரவு நேரக் காவலாளி ஒருவர் தேவை. தெல்லிப்பழையிலிருந்து 3 மைல் சுற்றளவுக்குள் வசிப்பவராகவும், 45 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது. 15-7-86க்கு முன்னதாக விண்ணப்பிக்கவும் டயானி எலெக்றிக்கல்ஸ் 222, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். [C 3398]

### விற்பனைக்கு

யானை மார்க் வெற்றுச் சோடா போத்தல்களும், பெட்டிகளும், கொக்கோக்கோலா, பண்ரா வெற்றுப் போத்தல் சேசுகளும் உடன் விற்பனைக்கு குண்டு 65, பிரதான வீதி யாழ்ப்பாணம். (C 3401]

### தவறிவிட்டது

சுப்பையா சிவக்குமாரன் என்பவருடைய 653571852 V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை கொக்குவிலுக்கும் மனோகரா சந்திக்கும் இடைப்பட்ட இடத்தில் 06-7-86 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் T சுப்பையா, C/o, M. கந்தையா, 'ஞானோதயம்', சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம்வழங்கப்படும். [C 3397]

**லிடோ**

இன்று முதல்
காலை 10-30, 2-30, 6-30
பாக்கியராஜ்-சரிதா நடித்த
**மௌனகீதங்கள்**
(கலர் - புதிய பிரதி)

**வெலிங்டன்**

10-30, 2-30, 4-30, 6-30 P-M
முதல் முறையாக யாழ் நகரில் காண்பிக்கப்படுகிறது.
**VENOM**
Action - Thrill


## விபத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தி துக்கதினம் அனுஷ்டிக்குமாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வேண்டுகோள் விடுத்திருந்தது

இதனையடுத்து யாழ் குடாநாட்டின் பல பகுதிகளில் நேற்று தோரணங்கள், கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டிருந்தன

இன்று காலை 9-30 மணிக்கு சாவகச்சேரி சந்தை மைதானத்திலும், மாலை 4 மணிக்கு யாழ் சென். ஜேம்ஸ் ஆலய முன்றலிலும், இரவு 7மணிக்கு கோப்பாய் பிள்ளையார் கோவிலடியிலும் அஞ்சலிக் கூட்டங்கள் பொதுமக்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

## இனப்பிரச்னை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஏற்பட தமிழ் போராளிகள் குழுவினரை கேட்டுக் கொள்ளும் பொருட்டு இந்தியாவில் தாம் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார்

தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட அனைத்து இலங்கைத் தமிழ் அமைப்புக்களையும் சந்திக்க விருப்பதுடன் தமது குழுவினர் இந்திய அரச அதிகாரிகளையும் நாளை வெள்ளிக்கிழமை புதுடில்லியில் சந்திக்க இருப்பதாகவும் மேலும் அவர் தெரிவித்தார். (து)

## தமிழ் மக்களின்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ப் போராளிகளைக் கொண்ட தனியானதொரு பிரிவு அமைக்கப்பட வேண்டுமெனவும், தேசியக் கொடியில் மாற்றம் கொண்டுவர வேண்டுமெனவும், பயங்கரவாதத் தடைச் சட்டம், அரசமைப்புச் சட்டத்தின் 6 வது திருத்தம் ஆகியவற்றையும் அரசாங்கம் வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டுமென நவசமசமாஜ கட்சி ஜனதிபதியிடம் கோரியுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். (ய-செ)

## தனியார்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

களாயிருந்தால் பொருட்களுடனும் முகாமுக்கு வந்தாலே அனுமதிப்பத்திரம் வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனையிறவுத் தடை முகாமைக் கடந்து யாழ் குடாநாட்டிலிருந்து நேற்றும் எந்தவிதத் தனியார் வாகனங்களும் செல்லவில்லை. [மா]

## 15 சிங்களவர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மீற்றர் தூரத்தில் 6ம்கட்டையில் வைத்து 3 லொறிகளும் தீவிரவாதிகளால் தடுத்து நிறுத்கப்பட்டு 16 பேரும் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் 3 லொறிகளும் தீமூட்டி எரிக்கப்பட்டதாகவும் அரசு அறிவித்துள்ளது.

கொலை செய்யப்பட்டவர்களில் 15 பேரின் சடலங்கள் திருமலை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு வைக்சப்பட்டுள்ளன.

திருமலையில் மயான அமைதி நிலவுகிறது. (மா)

## பாதுகாப்புச்சேவை

யாழ்ப்பாணம்வியாழன்

இம்மாதம் 12ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை பாதுகாப்புச்சேவையினர் உற்சவ தினங்களில் 24 மணி நேர பாதுகாப்புச் சேவையை மேற்கொள்வதெனத் தீர்மானித்துள்ளனர். (வா)

இச்சம்பவங்களை தொடர்ந்து அப்பகுதியில் இ. போ. ச பஸ் சேவைகளைத் தவிர்ந்த ஏனைய தனியார் பஸ் சேவைகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன. (மா)

## பூண்டுலோயா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தோட்டங்களிலிருந்துவரும் தமிழ் தோட்டத்தொழிலாளர்கள் விசாரணைக்குட்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கண்ணீர் ஓடுது விழியாலே

குருநகர் வாழ்தமிழ் பேசுங்குலத்தினை
கொன்று குவித்தாரே — மடிந்[து]
ஒரு மாதமாகியும் உள்ளம் குமுறுது
கண்ணீர் ஓடுது விழியாலே

செந்தமிழ் அன்னை குமுதினியாள் முதல்
செங்களம் கண்டாளே — தொடர்ந்து
வந்தவள் 'தூய ஒளி யுடன் 'அன்னை மேரி'யும்
வரிசையில் நின்ருளே.

ஓடும் படகினில் ஓநாய்க ளாகவே
தேடித் திரிந்தாரே — தமிழ்
பாடும் தமிழ்க்குல மாதர் முதலாய்
பழிதீர்த்துச் சிரித்தாரே.

மீண்டும் படுகொலை தொடர்ந்து வருகுது
மேன்மைத் தமிழா — இனி
வேண்டும் விடுதலை என்பதை யாருமே
வீணென்றும் சொல்வாரோ?

சாகும் தமிழினம் வேகும் நெருப்பினில்
சங்கம மாகிறதே — தினம்
ஆளும் கொடியவர் சுட்டுப் பொசுக்குஞர்
சீறி எழுவோமே.

குருநகர் மீனவர் படுகொலை 10-6-86 உங்கள் பிரிவால் துயருறும் தமிழ் பேசும் மக்கள். (தமிழீழக்கலைக்கழக - நாம் சிந்திய இரத்தம் நாடக மன்றம்.)

## முஸ்லிம் மாணவரை விடுவிக்கக்கோரி யாழ்.பல்கலைக்கழகமாணவர் நேற்று பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று அடையாள பகிஷ்கரிப்பொன்றினை நடத்தினுர்கள்.

இரு தினங்களுக்கு முன்னர் ஆனையிறவு தடை முகாமில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக இரண்டாம் வருட மாணவனும், சமமாந்துறையைச் சேர்ந்தவருமான ஏ. மன்ஸூரை விடுதலை செய்யக் கோரியே மேற்படி பகிஷ்கரிப்பை மாணவர்கள் நடத்தினர்.

இதுபற்றி யாழ் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லீஸ் விடுத்துள்ள அறிக்கையொன்றில், பகிஷ்கரிப்பில் ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ளது.

## திருமலையில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வல்படையினர் அவ்வீதியிலுள்ள வீடுகளின் கதவுகளைத் தட்டினுர்கள். சில வீடுகளுக்கு கற்களால் எறிந்தும் சேதப்படுத்தினுர்கள்.

தம்பியப்பாவின் வீட்டுக் கதவை ஊர்காவல்படையினர் தட்டியதும், அவரும் குடும்பத்தினரும் கதவைத் திறந்து வெளியே வந்தனர். அப்பொழுது துப்பக்கியால் சுட்டும், வாள்களால் வெட்டியும் அவர்கள் கொலைசெய்யபபட்டார்கள்.

கொலை செய்யப்பட்டவர்களில் தம்பியப்பாவினதும், மகன் ஜோதிராஜினதும் சடலங்கள் வீட்டுக்கு அண்மையிலுள்ள மீன் வாடியில் அரைகுறையாகஎரிந்தநிலையில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மற்றும் கொலை செய்யப்பட்ட தாயும் இரு புதல்விகளும் வீட்டுக்குள் வைத்தே எரிக்கப்பட்டனர். அவர்களது வீடும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

கொலைசெய்யப்பட்ட இக்குடும்பத்தினரின், தீயினல் கருக்கப்பட்ட 5 சடலங்களும் திருமலை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## லொறி உரிமையாளர் சந்திப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையே போக்குவரத்துச்சேவை சம்பந்தமாக ஏற்பட்டுள்ள பிரச்னைகள் குறித்து வட பிராந்திய லொறி போக்குவரத்துச சேவைச் சங்கம் இன்று காலை கூடி ஆராயவுள்ளது.

யாழ் மணிக்கூட்டு வீதியிலுள்ள ஞானம்ஸ் ஹோட்டலில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சகல லொறிகளின் உரிமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கபபட்டுள்ளது. (மா)


## வெளிநாடு பிரயாணம்

எனது குருப் ஒரு கஷ்டமுமின்றி சென்ற வாரம் சென்றடைந்தது. அடுத்த குருப் எதிர்வரும் 21-ம் திகதியளவில் செல்வதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கிறேன். ஏற்கெனவே எனனிடம் பாஸ்போட் தந்தவர்கள் உடனே வந்து சந்திக்கவும். மற்றையோர் பாஸ்போட்டுடன் வந்து என்னை நேரில் சந்திக்கவும்.

வியாழன், வெள்ளி, சனி.

வ. நல்லையா,
அளவெட்டி.

(C 3403)

# அறிவித்தல்

இதுவரை காலமும் சேதுவர் சிறிசேனு என வழங்கிவந்த எனது பெயரை 01-04-86 தொடக்கம் சேதுவர் சிறிதரன் என மாற்றிக்கொண்டேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

சே. சிறிதரன்.

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

[C 3383]

# உடனடியாகத் தேவை

பியர் வெற்றுப்போத்தல்கள் அல்லது ¾ பாணி அடைக்கும் போத்தல்கள் உடனடியாகத் தேவை. ஆகக்கூடிய விலை கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு உடனடியாக

**பணிப்பாளர்,**
அருள் ஆச்சிரமம், 5. கோவில் வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி:24081
என்ற முகவரிக்கு தொடர்புகொள்ளவும்.

[A 782]

# யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம்

எமது கம்பெனி பங்காளரின் 67-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை [12-07-1986] காலை 9-30 மணிக்கு நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெறவிருந்தது. ஆனால், தவிர்க்கமுடியாத காரணங்களுக்காக இக் கூடடம் நல்லூர் நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளதென்பதை பங்காளர்களுக்கு இத்தால் அறியத் தருகிறோம்.

இ. வசந்தசேனன்,
காரியதரிசி.

420 [530]. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

[A 784]

# சற்றுப் பொறுங்கள்

எசன்ஸ் வகைகள் உடலுக்கு தீங்கு விளைவிக்கின்றது!

ஆம்! இது வைத்தியர்களின் அத்தாட்சி!

ஆகவே சுத்தமான, சுகாதாரமான, பழரச பானங்களைப் பருகி உங்கள் உடல் நலத்தை இவ் விளவேனிற் காலத்தில் பாதுகாத்துக்கொள்ளுங்கள், அவ்வரிசையில் அமைவதுதான் தோலகட்டி தயாரிப்புகள். தோலகட்டி நெல்லிரசம், சுத்தமான, சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது. கடந்த 65 வருட காலமாக மக்கள் மனதில் நிலைத்த பெயர் - மறந்து விடாதீர்கள்! தோலகட்டி நெல்லிரசம் தாராளமாக கிடைக்கின்றது.

ஏகப் பிரதிநிதிகள்:

| | |
|---|---|
| **செபமாலை தாசர்சபை,** தோலகட்டி, வயாவிளான், | **ஜோ. எகட்டன்,** செனத் மார்க்கட்டிங், யாழ்நகர். |

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற

**வரணி மிசன் விற்பனை நிலையம்,**
**145, நவீன சந்தை, யாழ்நகர்.**

[A 780]

# பிரயாண ஒழுங்குகள்

## டென்மார்க், கனடா

(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)

ஜுலை 15-ம் திகதி எமது முகவர் கூட்டிச்செல்வார்.

எமது காரியாலயத்தில் பதிவு செய்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**லிபியா குவைத் சவூதி அரேபியா**

ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்பு.

அத்துடன்

பாஸ்போட், BOND, ரிக்கற்றிங் ஆகியனவும் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

**யூனிவேர்சல் ஏஜென்சி,**
**125 (455), ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில் பெற்ரோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக.)

(A 774,

# இன்றைய பலன்

மாதம்: ஆனி
திகதி: 26 [1986-7-10] வியாழன்; திருதியை பி.ப வரை
நக்ஷத்திரம்: ஆயிலியம் பி ப வரை

மேடம்: புண்ணிய விருப்புக்கள் ே லிடும். பொதுத் துறைகளில் புகழ் பரவலாம். பெரியோர்களுடைய உதவிக் குமிடமுண்டு,

இடபம்: புதிய முயற்சிகளில் ஆர்வம் தோன்றக் கூடும், வியாபாரிகளுக்கு இலாபகரமான தினம். புதிப தொடர்புகள் மூலம் முன்னேற்றம் உண்டு

மிதுனம்: பொருமீட்டுவதில் புதிய வழிகளைக் கையாளுவீர் எதையும் சிறப்பாகச் செய்வதில் முதலிடத்தைப் பெறுவீர்கள், மக்களாலும் மகிழ்ச்சியுண்டு,

கடகம்: சிந்தனை புதிர் போடும். சீறிவரும் கோபம் பெரியவர்களைப் பகைத்துக் கொள்ள தேரிடலாம். தொழில் துறையில் புதியகவலைகள் தோன்றக் கூடும்

சிங்கம்; ஆசை அலைகளினல் அவதிப்படுவீர்கள். வாழ்க்கையில் நிம்மதியற்ற நிலை தென்படும் ஆணவப் போக்கினுல் பிறருடைய பகையைச் சம்பாதித்துக் கொள்ள நேரிடும், நாடக்கம் நன்று.

கன்னி: கிடும்ப நலனில் உற்சாகம் பிறக்கும். உறவு முறைகளில் அபிவிருத்தி காணப்படும், அமைமதியுடன் கடமைகளைச் செய்வீர்கள்.

துலாம்: பேராசையின் மூலம் குறுக்கு வழியை நாடுவீர்கள். இதனுல் விடரீதங்கள் தோன்றக்கூடும். மறைமுக எதிர்ப்புக்களை சமாளிக்க வேண்டிய சந்தர்ப்பமேற்படலாம்,

விருச்சிகம்: ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் தோன்றும். வியாபாரத்தின் மூலம் முன்னேற்றமுண்டு அதிக பொருள் வரவிற்கும் வீணைபொருள் விருத்திக்குமிடமுண்டு.

தனுசு: அறவழியினை மனம் நாடும் தாராள மனப்பான்மை மூலம் பணமும் செலவாகும். இளையபிள்ளையால் வகிழ்ச்சிக்கு இடமுண்டு

மகரம்: சிறிய விடயம கூட சிரமமாகத் தோன்றும் உள் வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும். வாய்வுபதார்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

கும்பம்: களஸ்திர வழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம் பெறும். நீண்ட நாள் பகை இன்று நிவர்த்தியாவதற்கு இடமுண்டு: காதலர்கள் மத்தியில் பிணைப்புக்கள் இறுகும்.

மீனம்: ஏமாற்றம் தாக்கும், எதிலும் தயக்கநிலை தென்படும். செய் தொழில் மூலம் நஷ்டம் ஏற்படலாம் செலவினங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும்.

திருமலை ரவீந்திரன்

# முக்கிய அறிவித்தல்

வடபிராந்திய லொறி போர்குவரத்துச் சேவையில் ஏற்பட்டுள்ள தடங்கல் சம்பந்தமாக ஆராய்வதற்கு இன்று 10-7-86 காலை 9.30 மணியளவில் மணிக்கூட்டு வீதியில் இருக்கும் ஞானம்ஸ் ஹோட்டலில் கூடி ஆராயவிருப்பதால் சகல லொறிபஸ் உரிமையாளர்களையும் சமுகமளிக்குமாறு வேண்டுகிறோம்.

வடபிராந்திய
லொறி போக்குவரத்துச் சேவை.

(C3395]

# உடனடி பிரயாண ஒழுங்குகள்

## விசேஷ சேவை

### சவுதி அரேபியா

**கிளீனேர்ஸ்:-**
வைத்தியசாலை, விமான நிலையம்,
மத்திய தொலைபேசித் திணைக்களம்.

20 நாட்களுக்குள் பிரயாணம் செய்யக்கூடிய ஒழுங்குகள் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**யூனிவேர்சல் ஏஜென்சீஸ்**
**இல. 125 (455), ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(பெற்ரோலியம் கூட்டுத்தாபனத்தின் முன்பாக - ஆயுர்வேதக் கல்லூரி அருகாமையில்)

(A 776)

# வெற்றிடம்

## சிங்கப்பூரில் வீட்டு உதவியாளர்

### வேலைக்குத் தேவை

**ஆங்கிலம், ஆங்கிலமும் தமிழும், அல்லது தமிழ் பேசக்கூடிய 40 வயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்கள்**

சிங்கப்பூருக்குச் சென்று 2 ஆண்டுகளில் உணவு, தங்குமிடம், உடுதுணிகள், வைத்திய வசதி ஆகிய இலவச சலுகைகளுடன் 2400 அமெரிக்க டாலர்களைச் சம்பாதிக்கவும், மேலும் இரண்டு தடவை இரண்டாண்டு காலத்துக்கு, மாதம் 150 டாலர் வீதம் அதிகரித்த சம்பளத்துடன் ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக்கொள்ளவும் ஒரு பொன்னன சந்தர்ப்பம்!

சிங்கப்பூர் செல்ல உங்கள் பாஸ்போர்ட்டில் வழி இல்லாமல் இருந்தால் எங்கள் சிங்கப்பூர் ஏஜெண்ட் உங்கள் தெரிவை ஊர்ஜிதம் செய்தபின் சிங்கப்பூருக்குச் செல்ல அனுமதிக்தும்படி வெளிநாட்டு வேலைவாய்ப்புப்பிரிவு சிபார்சு செய்யும்.

**தேவைகள் :** போஸ்கார்ட் அளவிலான 2 கலர் போட்டோக்கள், பாஸ்போர்ட்டுக்குரிய10கறுப்பு/வெள்ளை போட்டோக்கள், உங்கள் பாஸ்போர்ட்டில் விபரங்கள் குறிக்கப்பட்ட சகல பக்கங்களையும் கொண்ட A-4 அளவிலான போட்டோஸ்டெட் பிரதிகள்.

**புறப்பாடு:** நேர்முகப் பரீட்சை முடிந்து 3-4 வாரங்களில் வேலைக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டவுடன் புறப்படுவதற்கு ஏதுவாக இருக்கும்!

**பூர்வாங்க நேர்முகப் பரீட்சைகள் :** தினசரி எல்லா வாராந்த நாட்களிலும் காலை 9 மணி முதல் பிற்பகல் 1-00 மணி வரை, தயவு செய்து 547162 இலக்கத்துக்கு டெலிபோன் செய்து முகாமையாளர் சிங்கப்பூர் எனக் கேளுங்கள்.

**இறுதி நேர்முகப் பரீட்சைகள் :** 1986 ஜுலை 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி.

**றேயல் ஏஜென்ஸி (பிரைவேட்) லிமிட்டெட்,**
**158, புதுச்செட்டித் தெரு, கொழும்பு - 13.**

அங்கீகார இலக்கம்: 470/03/85. 470/11/86
லைசென்ஸ் இலக்கம்:- 470.

[A 783]

## நன்றிநவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
### திரு குணரத்தினம் சிவபாதம்

[பருத்தித்துறை இலங்கை வங்கி, உதவி பதில் முகாமையாளர் ]

அன்னையின் மடியில்:
23- 11- 1936

மண்ணின் மடியில்:
11- 06- 1986

எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், இறுதிச் சடங்கு ஒழுங்குகளில் உதவிய வாகளுக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் 11- 07- 86 வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு வீட்டில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதியடந்தி போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றர், உறவினர் அன்பர்கள் நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்;
மனைவி திருமதி கமலநாயகியும், பிள்ளைகளும்.

''குரு இல்லம்'',
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.
(C 3382

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், வியாழன் காங்கேசன்துறை, பழை அருள்மிகு ஸ்ரீபராசக்தி அம்பாள வருடாந்த அலங்கார உற்சவம் நாளைமறுதினம் சனிக்கிழமை ஆரமபமாகின்றது. தொடர்ந்துபன்னிரண்டு நாட்கள் உற்சவம் நடைபெறும். அறங்காவலர் சித்த வைத்திய கலாநிதி கோ. சின்னத்தம்பி உற்சவ ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

## நன்றிநவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



### த. கதிரவேலு

(முன்னுள் கம்பர்மலை அ. த. க. பாடசாலை அதிபர்)

தோற்றம்:
03-02- 1925

மறைவு: 10- 06- 1986

அன்னாரின் ஈமக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும். சகலவழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் 10 07- 86 வியாழக்கிழமை (இன்று) காலை 6 மணியளவில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றர். உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, மக்கள்.

நிருவத்தம்பை,
ஊரிக்காடு
வல்வெட்டித்துறை.
(C 3378)

# மாவை உற்சவம் சனி ஆரம்பம்

யாழ்ப்பாணம், வியாழன் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 12ம் திகதி சனிக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது.

21ம் திகதி திருமஞ்சபவனியும், 26ம் திகதி திருக்கைலாச பர்வத ஊர்தி பவனியும் 27ம் திகதி பூம்பல்லக்கும் 30ம் திகதி திருக்கார்த்திகைத் திருவிழாவும் ஆகஸ்ட் 2ம் திகதி வேட்டைத் திருவிழாவும், 3ம் திகதி சப்பரமும், 4ம் திகதி பஞ்ச மகாரதோற்சவமும் 5ம் திகதி செவ்வாய்க்கிழமை ஆடி அமவாசைத் தீர்த்தமும் நடைபெறும்.

6-ம் திகதி புதன்கிழமை பழனியாண்டவர் திருவிழாவுடன் உற்சவம் பூர்த்தியுறும். (ஐ)

## யாழ். மத்திய கல்லூரி மெய் வல்லுநர் போட்டி


யாழ்ப்பாணம், வியாழன்.

யாழ். மத்திய கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 12 திகதி சனிக்கிழமை கல்லூரி அதிபர் திரு வி. பாலசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். நடராசா கலந்து கொள்வார்.

இம்முறை இப் போட்டி யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. [சிவ]

## முதலாண்டு நினைவஞ்சலி



### இ. பாக்கியநாதன்

மலர்வு: 05-07-1945

உதிர்வு: 09-07-1985

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து அன்புடன் எம்மை ஆதரித்த எம் குலவிளக்கே! எம்மை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு எங்கு சென்றீர்கள்? உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:

மனைவி, பிள்ளைகள், தாய்.

சென். அன்ரனிஸ் லேன்,
பண்டத்தரிப்பு.
C 3376

## போல் இல்லம் வெற்றி

மன்னர், வியாழன்.

மன்னர் உயிலங்குளம் றோ க த. க. பாடசாலை இல்லங்களுக்கிடையே நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் போல் (பச்சை) இல்லம் அதிக புள்ளிகளைப் பெற்று சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

பீற்றர் (மஞ்சள்) இல்லம் இரண்டாம் இடத்தையும் ஜோன் [சிவப்பு] இல்லம் மூன்றுமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

## விற்பனைக்கு வந்து விட்டது

சோவியற் நாட்டு விஞ்ஞான மேதைகளாகிய அ. கோரெவ்; வி. ஸிம்யானின் ஆகியோர் பல வருடம் பாரத நாட்டில் தங்கியிருந்து ஆய்வுகள் நடத்தி; புதிய விஞ்ஞானப் பார்வையில் உலகுக்கு ஈர்ந்தஅற்புதநூல் ஆசியஜோதி 'ஜெவகர்லால்நேரு' இந்நூல் 519 பக்கங்களையும் ஜெவகர்லால்நேருவின் கவர்ச்சி மிகு அட்டைபடத்தையும்; அவரின் தனி வாழ்வு பற்றியும் அவரின் மகள் இந்திராகாந்தியை பற்றியும்; சுதந்திரப் போராட்டத்தில் அவரின் ஈடுபாடுகள் பற்றியும்; அற்புதயான மாக்ஸீய-லெனினிய கண்ணோட்டத்திலிருந்து எழுதப்பட்ட சுவையான நூல். அத்துடன் அவரின் அரசியல் வாழ்வை சித்தரிக்கும் புகைப்படங்களும் ஆங்காங்கே கொடுக்கப்பட்டுள்ளது. மிகக்குறைந்த விலையில் விற்கப்படுகின்றது. இத்துடன் சிறுவர்களுக்குரிய கதை புத்தகங்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். தற்போதுள்ள சூழ்நிலையில் ''முதல் உதவி''க்குரிய புத்தகமும் விற்பனைக்குள்ளது.

மக்கள் பிரசுராலயம், யாழ்கிளை
(பொன். குமாரசுவாமி)

15/1, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(A-785)

## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ கனடா

★ ஜேர்மனி ★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு நேரடிப் பிரயாண ஒழுங்குகள் உடனடியாக எம் முகவர் உங்களைக் கூட்டிச் செல்வார்.

காரியாலயத்தில் உடனடியாக தொடர்பு கொள் கொள்ளுங்கள்.

★ சவுதி அரேபியா ★ மத்தியகிழக்கு நாடுகளில் வருமான ஒழுங்கு ஆண், பெண் இருபாலருக்கும் உண்டு

பாஸ்போட், பொன்ட் கூடிய கெதியில் குறைந்த செலவில் செய்து தரப்படும்:

### GROUP ATLANTIC

163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(அடைக்கலமாதா கோயில் முன்பாக)
(A 779)

## பணிவான வேண்டுகோள்

88 ஸ்ரீ 699 (நீல நிற C-90 Honda மோட்டார் சைக்கிள்)

கடந்த 4-7-86 வெள்ளி இரவு 10-00 மணியளவில் எனது உசன இல்லத்திலிருந்து ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத நபர்கள் பலவந்தமாக மோட்டார் சைக்கிளை பறித்துச் சென்று விட்டார்கள். இதனால் எனது மனைவி பிள்ளைகள் சுயீனமுற்று பெரிதும் பாதிப்படைந்துள்ளனர் புனித இயக்கங்கள் தயவு செய்து இதில் தலையிட்டு எனது மேற்படி மோட்டார் சைக்கிளை மீட்டுத்தரும்படி மிகவும் தாழ்மையாக கேட்டுக் கொள்கிறேன்.

தி. ஸ்ரீஇராமநாதன்,
உசன, மிருசுவில்.
(C-3373)

## வீடியோ பட்த்தில் நடிப்பதற்கு நடிக, நடிகைகள் உடனடியாகத் தேவை

விரைவில் தயாரிக்க இருக்கும் வீடியோ படத்தில் நடிப்பதற்கு ஆற்றல்மிக்க நடிக, நடிகைகள் உடன் தேவை அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் நேரில் தொடர்பு கொள்ளுங்கள்.

நேரம் 9-30 முதல் 12-00 மணிவரை

### மேஜர்ஷண்

மணிக்குரல் விளம்பர சேவை
பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.
(A-788)

## போட்டிப் பரீட்சை முடிவுகள்

வடமாநில திறன் ஆய்வு நிலையம் நடாத்திய போட்டிப்பரீட்சை முடிவுகள் 11-07-86 வெள்ளிக்கிழமை பங்குபற்றிய ஒவ்வொரு கல்வி நிலயத்திலும் பெற்றுக் கொள்ளலாம். பரீட்சை முடிவுகள் அனைத்தும் ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் வீட்டுக்கு அனுப்பப்படுகின்றன பரிசில்கள் பெறும் மாணவர்களின் பெயர்கள் 15-07-86 ஈழநாட்டுப் பத்திரிகையில் வெளிவரும். ஒவ்வொரு பாடங்களிலும் அதிக புள்ளிகள் பெற்ற 7 மாணவர்களின் பெயர்கள் பத்திரிகைகளில் வெளிவரும். பரிசில்கள் பெறும் மாணவர்கட்கான பரிசில்கள் அடுத்தமாதம் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் வழங்கப்படும். பரிசளிப்பு விழா சம்பந்தமான அழைப்பிதழ்கள் பத்திரிகைகள் மூலமாகவும். கல்விநிலயங்கள் மூலமாகவும் அறிவிக்கப்படும். அத்துடன் பின்வரும் திகதிகளில் கீழ்வரும் கல்விநிலயங்களில் ஒவ்வொரு பாடத்துக்கும் உரிய வினத்தாள்களுக்குரிய விடைகளும் விடைகளுக்கான புள்ளியிடும் முறையும் பற்றி இலவச கருத்தரங்கு நடைபெறும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 11-07-86 | வெள்ளி | 1.30க்கு | பௌதிகம் | I-II சயன்ஸ் அக்கடமி, யாழ்ப்பாணம். |
| 12-07-86 | சனி | 1.30 | பிரயோக கணிதம் | I-II சயன்ஸ் அக்கடமி, யாழ்ப்பாணம். |
| 13-07-86 | ஞாயிறு | 1.30 | தூய கணிதம் | I-II சயன்ஸ் அக்கடமி, யாழ்ப்பாணம். |
| 14-07-86 | திங்கள் | 1.30 | இரசாயனம் | நியூ மாஸ்டர் இன்சிற்றியூட், யாழ்ப்பாணம். |
| 15-07-86 | செவ். | 1.30 | விலங்கியல் | நியூ மாஸ்டர் இன்சிற்றியூட், யாழ்ப்பாணம். |
| 16-07-86 | புதன் | 1.30 | தாவரவியல் | நியூ மாஸ்டர் இன்சிற்றியூட், யாழ்ப்பாணம். |

[A 786]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
வியாழக்கிழமை 10-7-86

# 'இந்தியாவுக்கு சமர்ப்பித்த இலங்கை அரச அறிக்கையில் பல முரண்பாடுகள் உள்ளன'

## - இந்து கூறுகிறது

சென்னை ஜூலை 10

கடந்த ஜூன் 25ல் கொழும்பில் நடைபெற்ற அரசியல் கட்சிகளினது மகாநாட்டில் ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜயவர்த்தனா முன் வைத்த யோசனைகளுக்கும், இவை தொடர்பாக இலங்கை அரசு அனுப்பி வைத்த 'விளக்கங்களுக்கு'மிடையில் பெருமளவு முரண்பாடுகள் இருப்பதாக சென்னை நாளேடான 'இந்து' எழுதியுள்ளது.

அடுத்த சில நாட்களில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் புதுடில்லியில் நடத்தவுள்ள பேச்சுவார்த்தைகளின் போது இம் 'முரண்பாடுகள்' பற்றிய விவகாரம் எடுத்துக் கொள்ளப்படும் எனக் குறிப்பிடும் 'இந்து' இது தொடர்பாக மேலும் கூறியதாவது:

''மாகாணசபைகளுக்கு சட்டவாக்க, செயலாக்க அதிகாரங்களைப் பரவல் படுத்துவது தொடர்பான விஷயத்திலேயே இந்த 'முரண்பாடுகள்' தெளிவாகப் புலப்படுகின்றன உதாரணமாக இந்திய அரசிடம் கையளிக்கப்பட்ட விளக்க அறிக்கையுடன் இணைக்கப்பட்ட மாகாண சபைகள்பற்றிய குறிப்பின் முதலாவது பந்தியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

''ஒவ்வொரு மாகாணத்திலும் ஒருமாகாணசபைஅமைக்கப்படும், சட்டவாக்க, செயலாக்க (நிதி உட்பட) அதிகாரங்கள் ஏற்ற அரசியல் யாப்புத் திருத்தங்களுக்கமைய மாகாண சபைகள் வசம் ஒப்புவிக்கப்படும்'' ஆனல் அரசியல் கட்சிகள் மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைப் பத்திரத்தின் 10 வது பந்தியின் (அ)பிரிவில் இந்த அதிகாரங்கள் கவர்னர் வசம் ஒப்புவிக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

''இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பாக நடைபெற்ற முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது கூட நிர்வாக அதிகாரத்தை பரவல் படுத்துவது அதை நியோகிப்பது ஆகியவற்றுக்கிடையிலான அரசியல் யாப்பு வழிப்பட்ட வேறுபாடு சர்ச்சைக்குரிய பிரச்னையாக இருந்தது. அதிகாரத்தை பரவலாக்குவதென்ற முறைக்கு ஒரு அரசியல் யாப்ட ரீதியான அடித்தளம் இருக்கின்ற அதே வேளையில் ஒரு ஒற்றையாட்சி கட்டுக் கோப்பில் ஜனாதிபதியால் நியோகிக்கப்படுகின்ற அதிகாரம் மட்டுப் பட்டதாகவே இருக்கும் இகனல் தான் அதிகாரத்தை நியோகிப்பது பற்றி கொழும்பு முன் வைத்த ஆலோசனையை த. வி. கூட்டணி நிராகரித்தது.

அடுத்து கொழும்பு அரசியல் கட்சிகளின் மகாநாட்டில் முன் வைக்கப்பட்ட யோசனைப் பத்திரத்தில் மாகாணக் கவர்னருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சட்டவாக்க, செயலாக்க அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கு மாகாண சபைகள் எந்த அளவுக்கு அனுமதிக்கப்படும் என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது ஆனல் இந்திய அரசுக்கு வழங்கப்பட்ட விளக்க அறிக்கையில் கவர்னரின் அதிகாரங்கள் பற்றிய பிரச்னை பின்னர் ஆராயப்படும் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. (ஷ)

## இன்று நினைவஞ்சலி

யாழ்ப்பாணம். வியாழன்,

படுகொலை செய்யப்பட்ட குருநகர் கடற்றொழிலாளரின் 31ம் நாள் நினைவஞ்சலிக்கூட்டம் இன்று மாலை குருநகர் கலையரங்கில் டாக்டர் ஜே பி ஸி பிலிப் தலைமையில நடைபெறும்.

இவ் அஞ்சலிக்கூட்டத்தில் யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம், உதவி அரசாங்க அதிபர் மாணிக்கவாசகர் பேராசிரியர் திரு கா. சிவத்தம்பி திரு. முபுஸ்பராஜா மற்றும்பலர்உரையாற்றுவார்கள். இதைத் தொடர்ந்து இரங்கற் திருப்பலியும் நடைபெறும். (சிவ)

## டென்மார்க்சென்ற 30பேர் திரும்பினர்

கொழும்பு, புதன்

டென்மார்க் செல்வதற்கு இந்தியா ஊடாக மொஸ்கோ சென்றிருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சுமார் 30 பேர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

கடந்த வாரமும் இதே போல் டென்மார்க் செல்விருந்த 16 பேர் திரும்பி வந்துள்ளனர்.

கொழும்பிலுள்ள முகவர் நிலயங்களூடாகச் சென்றவர்களே இவ்வாறான பரிதாப நிலையை அடைந்துள்ளாரென தெரியவருகிறது. [சிவ]

## தடைமுகாமில் தவில் கச்சேரி

வவனியா, வியாழன்

கொழும்பில் இசை நிகழ்ச்சி ஒன்றில்கலந்து கொள்வதற்காகயாழ்ப்பாணத்திலிருந்து சென்ற தவில், நாதஸ்வரக் கலைஞர்கள் நேற்றுக்காலை வவனியா தடைமுகாமில் கச்சேரி ஒன்றை நடத்தினர்கள்.

தவில் நாதஸ்வர வித்துவான்களால் எடுத்துச்செல்லப்பட்ட தவில். நாதஸ்வரம் ஆகியனவற்றைப் பலத்தசோதனைசெய்த ஆயுதப் படையினர் அந்தஇடத்தில் கச்சேரி செய்யும்படி கலைஞர்களைப் பணித்தார்களாம். ஆயுதப்படையினரின் பணிப்பின் பிரகாரம் தவில் நாதஸ்வரக்கலைஞர்களால் அந்த இடத்திலேயே தவில் கச்சேரி நடாத்தப்பட்டது. கச்சேரி முடிந்த பின் அவர்களுக்கு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. (வா)

## வவனியாவில் மேலும் ஒரு தடைமுகாம்

வவனியா, புதன்

வவனியாவில் மூன்றுவது தடை முகாம் ஒன்று நேற்று ஏற்படுத்தப்பட்டது.

வவனியா குடியிருப்பு பாதையில் குடியிருப்புப் பிள்ளையார் கோவிலுக்கருகில் இந்தத் தடை முகாம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸ் உத்தியோகத்தர்களே இம் முகாம்களில் பணியாற்றுகின்றார்கள்

நேற்று முன்தினம் மதவாச்சியில் வைத்துக் கடத்தப்பட்ட வான் ஒன்று இந்தப் பாதை வழியாகவே கொண்டு போகப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதையடுத்தே இப் புதிய தடை முகாம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே வவனியா கச்சேரியடியில் ஒன்றும் ரயில் நிலயத்துக்கருகில் ஒன்றுமாக இரண்டு முகாம்கள் இருக்கின்றன.

## 500 இந்திய சாரங்கள் பிடிபட்டன

வவனியா, புதன்

வவனியாவிலிருந்து அநுராதபுரத்துக்கு அலுமினியப் பாத்திரங்கள் கொண்டு சென்ற வானில் 500 இந்திய சாரங்கள் மதவாச்சியல் வைத்து பிடிபட்டுள்ளன.

அலுமினிய பாத்திரங்களுக்கிடையில் இச் சாரங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தனவாம். இது தொடர்பாக முஸ்லிம் பிரயாணி ஒருவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

## 'ரேஸோ' அறிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

''ஒலி - ஒளி ஒன்றியத்தின் வேண்டுகோளின்படி கடந்த 7ம் திகதி உள்ளூர்த் தொலைக் காட்சி நிலயங்கள்மீது மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது ஒழுங்குவிதிகளை மீறிய உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டதுடன், மோசமான காட்சிகளை ஒளிபரப்பிய தொலைக்காட்சி நிலயங்களின் உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.''

இவ்வாறு தமிழீழ மாணவர் பேரவை 'ரேஸோ' வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும், ''இவர்களுக்கான அடுத்த நடவடிக்கைபற்றி இம்மாதம் 14ம் திகதி நடைபெறும் கூட்டத்தில் ஆராயப்படுமென்றும், நேற்று மீண்டும் இரு ஒளிபரப்புச் சேவைகளும் மறு அறிவித்தல்வரை நிறுத்திவைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இனப்படுகொலையை எதிர்த்து——— காரைநகரில் நாளை ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம், வியாழன்

தமிழ்ப் பிரதேசங்களில் நடத்தப்படும் இனப் படுகொலைகளைக் கண்டிக்கும் வகையில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நாளை வெள்ளிக்கிழமை காரைநகரில் நடைபெறவுள்ளது.

காலை எட்டு மணியளவில் வியாவிலில் ஆரம்பமாகும் இவ்வூர்வலம், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு முன்பாக முடிவடையும். அதைத் தொடர்ந்து பொதுக் கூட்டமும் நடைபெறும்.

ஈழவர் முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ்வார்ப்பாட்ட ஊர்வலத்தில், காரைநகரிலுள்ள சகல வெகுஜன அமைப்புக்கள், பொது ஸ்தாபனங்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள் மற்றும் சகல அரசாங்க ஊழியர்கள், பொது மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## நல்லூர் வட்டார சங்கீத, நடன, நாடகப்போட்டிகள்

யாழ்ப்பாணம், வியாழன்.

நல்லூர் கல்வி வட்டார சங்கீத நடன, நாடகப்போட்டிகள் இன்று வியாழக்கிழமை யாழ். இந்துமகளிர் கல்லூரி மண்டபத்தில் நல்லூர் வட்டாரக்கல்வி அதிகாரியின் தலைமையில் நடைபெறவுள்ளது. வட்டாரத்திலுள்ள முப்பத்தொன்பது பாடசாலை மாணவ, மாணவிகள் இதில் கலந்து கொள்ள உள்ளனர்.



# மரண அறிவித்தல்

### திருமதி இராஜேஸ்வரி கனகசபாபதி

திருமதி இராஜேஸ்வரி கனகசபாபதி (தெல்லிப்பழை) காலமாகிவிட்டார். இவர் கனகசபாபதியின் அன்பு மனைவியும், இராஜமோகன் (பிரான்ஸ்), சியாமளா, மஞ்சுளா, வத்சலா ஆகியோரின் அன்புத் தாயாருமாவார் அன்னரின் ஈமக்கிரியைகள் தெல்லிப்பழை இல்லத்தில் 10-07-86 (இன்று) பிற்பகல் 3மணியளவில் நடைபெற்று தெல்லிப்பழை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

N. ரவீந்திரன்
மணியகாரன் வீதி,
தெல்லிப்பழை.

(C 3408)

### திருமதி மனோன்மணி கனகசபாபதி

திருமதி மனோன்மணி கனகசபாபதி 8-07-86 பிலிப்பைன்சில் காலமானார். இவர் (இளைப்பாறிய P W. D. கனகசபாபதியின் அன்பு மனைவியாரும், கணேசலிங்கம், சாந்தா, கணராஜா ஆகியோரின் அன்புத்தாயாரும், செல்வரத்தினம் (A. D B. மணிலா) பத்மினி, ரதிமலர் ஆகியோரின் மாமியாருமாவார். ஈமக்கிரியைகள் பிலிப்பைன்சில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: க, கணேசலிங்கம்
நம். 127, சச்சேரி, நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(C 3391)

### திருமதி நடராசா இரத்தினம்

கொக்குவில் மேற்கு திருமதி நடராசா இரத்தினம் 07-07-86ல் காலமானார். இவர் தம்பு நடராசாவின் அன்பு மனைவியும், இராசலக்ஷமி (ஆசிரியை, கொக்குவில் இந்துக்கல்லூரி), இராசேஸ்வரன் (தொலைத் தொடர்பு பரிசோதகர், அபுடாபி, இராசதேவி, இராசகுலசிங்கம் (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இராசகுலேந்திரன் (தொலைத் தொடர்பு பரிசோதகர், கொழும்பு), இராசகுமார் ஆகியோரின் தாயாரும், நடராசா (ஆசிரியர், உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை) அவர்களின் சகோதரியும், அழகரட்ணம் (பொறியியலாளர், R.D A. அநுராதபுரம்). கமலாவதிதேவி, செல்வநாயகம் (ஜேர்மனி), சுகிர்தா, ரசிக்கா ஆகியோரின் மாமியாரும், யோகாம்பாளின் மைத்துனியும், விஞேதினி, விஜிதன், ஞானவதி, சுதர்சினி, பிரகாஷ், கார்த்தீபன் ஆகியோரின் பாட்டியுமாவார். தகனக்கிரியைகள் 10ம்திகதி (இன்று) 5 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்,

(C 3407)

# மரண அறிவித்தல்

### திருமதி சுந்தரம்பிள்ளை மீனுட்சி (பச்சைமுத்து)

சாவகச்சேரி வடக்கு மீசாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளையின் மனைவி மீனுட்சி 9-7-86ல காலமாகிவிட்டார். அன்னார் நாகரத்தினம் (கயாரு), நாகபூரணி, துரைராசா ஆகியோரின் அன்புத்தாயாரும்; சிவராசா, ஞானலோசனி, (கயாரு), கமலாம்பிகை, முருகானந்தன், கிருபானந்தன் ஆகியோரின் அன்புமாமியாரும், சிவானந்தன் (U K). சிவோதயன் (U. S A), சிவநாதன் (கனடா), சிவராசா (கயாரு) சிவபூரணி மீனு (கயாரு), யசோதரா (U. K), சுபத்திரா (U. K), சத்தியேந்திரா (U K), கமலேஸ்வரன் (இத்தாலி), பரமேஸ்வரன், துவாரகேஸ்வரன், சர்வேஸ்வரன், தர்சினி, குமுதா (U. S. A), குசலா (கனடா) ஆகியோரின் அன்புப்பேத்தியாரும், ஜெனு (U K). ரஜீவ் (கயாரு), தனுஷன் (U. S. A) ஆகியோரின் அன்புப்பூட்டியும், காலஞ்சென்ற பொன்னையா, காலஞ்சென்ற கதிரித்தம்பி, தம்பிப்பிள்ளை (ஐயா), மார்க்கண்டு (இருபாலை), செல்லமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும்; அற்புதத்தின் அன்பு மைத்துனியும் ஆவர். அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று (10-07-86) பி. ப. 2மணியளவில் நடைபெறும்.

நா. சிவராசா,
சத்தியா ஏஜென்சீஸ்,
சாவகச்சேரி.

[C-3409]



இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூலை மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.